### கடந்த 5 ஆண்டு கழக ஆட்சியில் ரூ.12.16 லட்சம் கோடி முதலீடுகள் – 1176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம்

# 36 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கி - தொழில் துறையில் மகத்தான சாதனை புரிந்தவர் எங்கள் தலைவர்!

## சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் வந்தவாசி எஸ்.அம்பேத்குமார் பெருமிதம்!

**சென்னை, செப்.7 -**

**“கடந்த 5 ஆண்டு கால கழக ஆட்சியில் ரூ.12.16 லட்சம் கோடி முதலீடுகள் - 1176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், 36 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கி -தொழில் துறையில் மகத்தான சாதனை புரிந்தவர் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்” என்று சட்டப்பேரவையில் - தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் வந்தவாசி எஸ். அம்பேத்குமார் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் எஸ்.அம்பேத்குமார் பேசியதாவது:-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா இவர்களை வணங்கி என் உரையைத் துவங்குகிறேன். நவீன தமிழ்நாட்டின் சிற்பி, ஒட்டுமொத்த தமிழ்மக்களின் தலைவர், நின்ற அனைத்துத் தேர்களிலும் வென்ற ஒரே தலைவர் எங்கள் முத்தமிழறிஞ கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020-2021ஆம் ஆண்டில் 07 என படுபாதாளத்தில் கிடந்த பொருளாதாரத்தைத் தட்டி எழுப்பியவர், இரவு பகல் பாராது ஓய்வுக்கு ஓய்வு தந்து உழைத்தவர், இந்திய மாநிலங்கள் எதுவும் அடைய முடியாத அளவிற்கு 11.19 என்னும் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்த ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு என்னும் பெருமையை நமக்குப் பெற்றுத் தந்தவர், இதை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையே பாராட்டும்வகையில் புதிய வரலாற்றை உருவாக்கியவர், எங்கள் திராவிட நாயகர் தலைவர் அவர்களை போற்றி வணங்குகிறேன்.

வேகமும், நிதானமும், வீரமும், விவேகமும் மிளிர ஐயா தலைவர் கலைஞர் அவர்களும், திராவிட நாயகரும் தளபதியாய் எங்களை வழிநடத்தும் எங்கள் இளந்தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாசத்திற்குரிய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கு வணக்கம். திருவண்ணாமலை மாவட்டத்தின் அடையாளமாக விளங்குபவர், என்னைப்போன்ற கழக நிர்வாகிகளை உருவாக்கி வருபவர், உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பவரை உயர்த்துபவர், என் உயிரினும் மேலான எங்கள் எதிர்க்கட்சி கொறடா ஐயா அவர்களை வணங்குகிறேன். இந்தப் பேரவையின் துணைக் கொறடா அவர்களுக்கும் என் வணக்கம்.

இந்தப் பேரவை மண்டபத்தில் எனக்குத் தொடர்ந்து 2016, 2021, 2026 என மூன்றாவது முறையாகப் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய வந்தவாசி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், ஆரணி பாராளுமன்ற உறுப்பினருமான எங்கள் அருமைக்குரிய எம்.எஸ். தரணிவேந்தன் அவர்களுக்கும், தலைமை செயற்குழு உறுப்பினர் என் அருமைக்குரிய ஐயா பெரியவர் அவர்களுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் கழக மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், ஏனைய அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவருக்கும் என் அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், தோழர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என் உரையை துவங்குகிறேன்.

இன்று தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**41 சதவிகித பெண் தொழிலாளர்கள்!**

தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021, தமிழ்நாடு காலணி மற்றும் தொல்பொருள் கொள்கை 2022, தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023, தமிழ்நாடு குறைகடத்தி மேம்பாட்டு மின்னணுவியல் கொள்கை 2024, தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை 2025 எனப் புதிய தொழில் கொள்கைகளை உருவாக்கி, விரைவான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்தவர் எங்கள் கழகத் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதி அவர்கள்.

இந்தியாவில் மிக அதிகமாக 40 ஆயிரம் தொழிற்சாலைகளைக் கொண்டது தமிழ்நாடு. ஒட்டுமொத்த தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் அதிகமுள்ள மாநிலம் தமிழ்நாடு. இந்தியா முழுவதிலும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண்களில் 41 சதவிகித பெண் தொழிலாளர்களைக் கொண்டது தமிழ்நாடு. மோட்டார் வாகனங்கள், ஆடைகள், தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்களின் உற்பத்தியில் முதலிடம் தமிழ்நாடு. கணினி, ஒளிக்கருவிகள், இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்களின் உற்பத்தியில் இரண்டாம் இடம் தமிழ்நாடு. மின்னணுவியல் ஏற்றுமதியில் 41.23 சதவிகித பங்களிப்புடன் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. இந்தப் பெருமைகளையெல்லாம் இந்த அரசிற்குப் பின்புலமாக தந்தது, எங்களுடைய திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள்!**

மூடப்பட்ட Ford நிறுவனம், 3,250 கோடி முதலீட்டில் வாகன என்ஜின் உற்பத்தி அலகை, மறைமலை நகர் தொழிற்சாலையில் மீண்டும் அமைக்க செய்தவர் எங்கள் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் 286 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ சாதனங்கள் பூங்கா அமைத்தவர் எங்கள் கழகத் தலைவர் அவர்கள். வல்லம் வடகாலில் 18 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் பாதுகாப்புடன் தங்கிட 705 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புகளை உருவாக்கியவர் எங்கள் கழகத் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதி அவர்கள். 2,573 கோடி ரூபாய் முதலீட்டில் 39 ஆயிரத்து 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் தைவான் நாட்டு காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தவர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள்.

தொழிற்பூங்காவில் 4,434 கோடி ரூபாய் முதலீட்டில், 3 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் TATA Power Solar நிறுவனத்தின் சூரிய மின்கல உற்பத்தித் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தவர் எங்கள் கழகத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள். திருவண்ணாமலை, உதகமண்டலம், காரைக்குடி, இராசிபுரம், கரூர், புதுக்கோட்டை, விருதுநகர் முதலிய 11 இடங்களில் Mini TIDEL park-கள் உருவாக்கப்பட வழிவகுத்தவர் கழகத் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதி அவர்கள். பட்டாபிராமில் 21 தளங்கள் கொண்ட மாபெரும் TIDEL park-வினைத் திறந்து வைத்தவர் கழகத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள்.

பட்டியலினத்தவர், பழங்குடியினர் புதிய தொழில்கள் நிறுவுவதற்கும், நடத்திவரும் தொழில் நிறுவனங்களை வளர்ப்பதற்கும், தேவையான நிதியுதவிகளை வழங்கிட Annal Ambedkar Business Champions Scheme மூலம் 14 பட்டியலின, பழங்குடியினருக்கு 21.98 கோடி ரூபாய் கடனுதவி வழங்கியவர் கழகத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள். உப்பளத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மழைக்காலத்தில் ஒவ்வொரு தொழிலாளர்களின் குடும்பத்திற்கும் ரூபாய் 5 ஆயிரம் வீதம் 24.86 கோடி நிதி வழங்கி, 49,721 குடும்பங்களுக்குத் துணைபுரிந்தவர் எங்கள் கழகத் தலைவர், அண்ணன் தளபதி அவர்கள்.



**சாதனை படைத்த எங்கள் தலைவர்!**

‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’ என்று பாரதியார் பாடியதுபோல, தமிழ்நாட்டின் தொழில் வளம் பெருக்கிட எங்கள் கழகத் தலைவர் அவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், அரபு நாடுகள் ஆகிய வெளிநாடுகளுக்கு அரசுமுறைப் பயணங்களை மேற்கொண்டு, முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், திராவிட மாடல் அரசு வழங்கும் சலுகைகளையும் எடுத்துக் கூறி, ‘தமிழ்நாட்டிற்கு வாருங்கள், புதிய தொழில்களைத் தொடங்குங்கள்’ என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதன்வாயிலாக 5 ஆண்டுகளில் 12.16 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஏறத்தாழ 36 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும், 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, இத்தகைய சாதனைப் படைத்த தலைவர், எங்கள் கழகத் தலைவர், போற்றுதலுக்குரிய தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் 2024, ஜனவரி மாதம் 7, 8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் மின் வாகன உற்பத்தியில் நீண்டகால அனுபவம் வாய்ந்த வியட்நாம் நாட்டின் VinFast நிறுவனம் 16 ஆயிரம் கோடி முதலீட்டில் தூத்துக்குடியில் மின் வாகன தொழிற்சாலை நிறுவிட ஒப்பந்தம் நடைபெற்றது.

22.-5.-2024 அன்று அடிக்கல் நாட்டி துவங்கி வைத்தவர் எங்கள் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் 18 மாதங்களில் முடிவடைந்த நிலையில் 4-.8.-2025 அன்று தூத்துக்குடிக்கு நேரில் சென்று தொழிற்சாலையைத் திறந்து வைத்தவர் எங்கள் கழகத் தலைவர், திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள்.

2008-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செய்யாறு சிப்காட் வளாகத்தில் முதல் அலகும், 2015 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் காலத்தில் இரண்டாம் அலகும், மொத்தம் 2,936 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டன. இந்த இரண்டு அலகுகளிலும் மொத்தம் 74 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 50 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு, அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் வசதியாகவும், வளமாகவும் வாழ்கின்றனர். செய்யாறு சிப்காட் நிறுவனத்தின் மூன்றாவது அலகினை உருவாக்கிட தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2019-ஆம் ஆண்டில் நில எடுப்புத் தொடர்பாக விளம்பரம் ஒன்றை வெளியிட்டு, நடவடிக்கை மேற்கொண்டார். நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு மாவட்ட வருவாய் அலுவலர், 8 சிறப்பு வட்டாட்சியர்கள் பணியில் நியமனம் செய்யப்பட்டு, நில எடுப்புப் பணிகள் தொடங்கின. இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்குப்பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நில எடுப்புப் பணிகள் எங்கள் ஆட்சியிலும் நடைபெற்றது. விரிவாக்கத்திற்குத் தேவைப்பட்ட 3,174 ஏக்கர் நிலம், அதில் அரசுக்கு சொந்தமான நிலம் 375 ஏக்கர், தரிசு நிலம் 1,200 ஏக்கர், குவாரி நிலம் 240 ஏக்கர், இந்த நிலங்களில் 1,836 பட்டாதாரர்கள். இவர்களில் ஒப்புதல் அளித்த 90 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் உரிய நிவாரண தொகையைப் பெற்று வந்தார்கள்.

**எந்த வகையில் நியாயம்?**

இந்நிலையில் அரசுக்கு எதிராக திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேராத, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியைச் சேர்ந்த அருள் ஆறுமுகம் என்பவர் வியாபார நோக்கத்தில் அப்பகுதி மக்களை தூண்டிவிட்டு போராட்டத்தில் ஈடுபட செய்தார். அதன் காரணமாக அவர்மீது அரசு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்தது. ஆனால், எங்கள் மாவட்டத்தின் படித்த இளைஞர்கள், புதிய தொழிற்சாலைகள் வர வேண்டும், அப்போதுதான் எங்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். நாங்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றெல்லாம் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் போராட்டம் நடத்தினார்கள். இந்நிலையில் ஆட்சி மாற்றத்திற்குப்பின் எங்கள் மாவட்டத்திற்கு தொழிற்சாலைகள் வரக்கூடாதா, செய்யாறு சிப்காட் தொழில் வளாகத்தில் மூன்றாம் அலகு தேவையில்லை என போராடியவர்களுடன் சேர்ந்து எங்கள் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பச்சைத் துண்டு அணிந்துகொண்டு அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வது இந்த ஆட்சியில், எந்த வகையில் நியாயம்? எங்கள் மாவட்டத்திற்கு தொழிற்சாலைகள் வரக்கூடாதா, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடாதா, எங்கள் பகுதியில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படக் கூடாதா, இந்த அரசின் கொள்கைதான் என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

**பத்திரிகையாளர்களை அனுமதிக்காத மாநாடு!**

தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் ஆட்சி சாதனைகள். 2026, மே 10 ஆம் தேதி முதல் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகவும், 1,02,514 கோடி முதலீடுகள் உறுதிமொழிகளைப் பெற்றுள்ளதாகவும், 2026-2027 கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 33-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் எந்தெந்த இடங்களில் எந்தெந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படும், எந்தெந்த தொழிற்சாலைகளில் எவ்வளவு முதலீடு செய்ய அரசு உறுதியளித்துள்ளது. 13-.8-.2026 அன்று தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் தொலைக்காட்சி நிருபர்களோ, பத்திரிகையாளர்களோ அனுமதிக்கப்படாமல் போல் நடைபெற்றிருக்கிறது. முதலீட்டாளர்கள் யார், யார் என்பதை பொது மக்கள் அறியக்கூடாதா, என்ன என்று அறிய இந்த பொது மக்கள். . .

அந்த மேல்மா சிப்காட் தொடர்பாக போராடிய விவசாயிகளை குண்டர் சட்டத்தில் அடைத்ததாக சொன்னார்கள். அதில் உண்மையிலேயே பார்த்தீர்கள் என்றால், 10 செண்ட் நிலம்கூட இல்லாதவர்கள்தான் ரோட்டில் வந்து போராடினார்கள்.

விவசாயிகள் மீது அக்கறை கொண்ட ஒரு அரசு எது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம் அரசு மட்டும்தான். விவசாயிகளுக்கு பொற்கால ஆட்சி எதுவென்றால் அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். 1989-ல், இலவச மின்சாரத் திட்டம். விவசாயிகளுக்கான மின்சாரம் ஒரு பைசா குறைக்க வேண்டுமென்று போராடியபோது, ஒட்டன்சத்திரத்தில் நாராயணசாமி நாயுடு என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். பிறகு 1989-ல் முத்தமிழறிஞர் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோதுதான். . .

அன்று மின்சாரக் கட்டணத்தில் ஒரு பைசா குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் போராடினார்கள். ஆனால், 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், இனி ஒரு பைசா கூட செலுத்தத் தேவையில்லை என்றார். அவ்வாறு ஆணை பிறப்பித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதன்பிறகு 2006-2011 அனைத்து விவசாயிகளுக்கும், அது ஏழை விவசாயி, சிறு விவசாயி, குறு விவசாயி, அ.தி.மு.க. விவசாயி, தி.மு.க. விவசாயி, பா.ம.க. விவசாயி, எந்த விவசாயி என்ற பாரபட்சம் இல்லாமல் 7,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்த தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். அதுமட்டுமல்ல, 2021-2025-ஆம் ஆண்டில் எங்கள் கழகத் தலைவரான அண்ணன் தளபதி அவர்கள், போற்றுதலுக்குரிய அண்ணன் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் 2,50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

**ஆந்திராவை நோக்கி தொழிற்சாலைகள்!**

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லை, முதன்முதலாக விவசாயிகளுக்கு வேளாண்மை பட்ஜெட் போட்ட தலைவர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். ஆகவே, விவசாயிகளைப் பற்றி, நிறைந்த அக்கறைகொண்ட அரசு . .

நேற்றைய தினம் நமது முதலமைச்சர் அவர்கள், பரந்தூர் விமான நிலையத்தை கைவிடப்போவதாக அறிவித்தார். அதில் உள்ளே போக விரும்பவில்லை. ஆனால், அருகிலுள்ள ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் ஆந்திராவில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்திட வேண்டுமென்பதற்காக விமான நிலையங்களை பிரம்மாண்ட அளவில் கட்டியுள்ளார்கள். ஏற்றுமதி பெருகி, பொருளாதார வளர்ச்சியும் அங்கே நடைபெறுகிறது. அதனால் தமிழ்நாட்டிலிருந்து பல தொழிற்சாலைகள் ஏற்கெனவே ஆந்திராவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. மேலும், பல தொழிற்சாலைகளை தமிழ்நாடு இழந்துவிடாமல் இருக்க, நீங்கள் அறிவித்துவிட்டதால் பிடிவாதம் காட்டாமல் பரந்தூர் விமான நிலையத்தை கைவிடும் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறன்.

எனவே, தொழில் துறையைப் பொறுத்தமட்டில், இன்னும் இந்த அரசு செயல்படவே ஆரம்பிக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதனால், reel செயல்பாடுகளில் மட்டுமே நின்றுவிடாமல், real செயல்பாடுகளில் இந்த அரசு இறங்க வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது மாவட்ட பொறுப்பு அமைச்சர் இருக்கிறார். வந்தவாசி சட்டமன்றத் தொகுதி, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத் தொகுதி, வந்தவாசி அரசு தாலுகா மருத்துவமனை, ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டமாக இருக்கும்போது ஆரம்பிக்கப்பட்ட ஒரு மருத்துவமனை. வந்தவாசி தற்போது விபத்து அதிகம் நிகழக்கூடிய ஒரு பகுதியாக மாறிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த தாலுகா மருத்துவமனையை ஒரு மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

**பெரணமல்லூரை புதிய வட்டமாக்குக!**

அதுமட்டுமல்ல, வந்தவாசி சுற்று by-pass சாலை சேத்துப்பட்டு-திண்டிவனம் by-pass சாலை நிறைவு செய்யப்பட்டுள்ளது. சேத்துப்பட்டு-செய்யாறு by-pass சாலை நிறைவு செய்யப்பட்டுள்ளது. இப்போது மேல்மருவத்தூர்-காஞ்சிபுரம், காஞ்சிபுரம்-செய்யாறு புதிய புறவழிச்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, பெரணமல்லூர் ஒன்றியம், ஏந்தல் கிராமத்தில் 40 ஏக்கர் பரப்பளவில் கடந்த கால திராவிட மாடல் முதலமைச்சர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதி ஒரு SIDCO தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிப்பதாக அரசாணை வெளியிட்டார்கள். அதையும் தொடங்கிட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், வர இருக்கின்ற காலக்கட்டத்தில் வந்தவாசியை அடுத்த பெரணமல்லூரில் ஒரு புதிய வட்டம், 2006-2011 சட்டமன்றம் வரை அது பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதியாக இயங்கிக் கொண்டிருந்தது. பிறகு தொகுதி மறுசீரமைப்பில் பெரணமல்லூர் சட்டமன்ற தொகுதியில் 60 சதவிகிதம் வந்தவாசி சட்டமன்ற தொகுதியிலும், 40 சதவிகிதம் போளூர் சட்டமன்றத் தொகுதியிலும் சேர்க்கப்பட்டு விட்டது. ஆகவே, பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வட்டம், அந்த கோட்டமாகவும் சேர்த்து நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வாயிலாக முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்கிறேன். மீதமுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையில் படித்ததாகக் கருதி, நீங்கள் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**தொகுதி கோரிக்கைகள்:**

வந்தவாசி தொகுதியில், மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக உயர்த்தித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர் தலைமையிடமாகக் கொண்டு வந்தவாசி, சேத்துப்பட்டு வட்டத்தைப் பிரித்து புதிய வட்டமாக உருவாக்கித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதியில், சுகந்தி ஆற்றைத் தூர்வாரி இரண்டு பக்கமும் Retaining Wall கட்டி, தேவையான இடங்களில் Check Dam கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, தேசூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுக்கா மருத்துவமனையாக உயர்த்தித் தர வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தை, இரண்டாகப் பிரிக்கும் பட்சத்தில் வந்தவாசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டமாக உருவாக்கித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, தேசூர் V.A.O அலுவலகம் கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி கோட்டையில், போர் நினைவுச் சின்னம் உருவாக்கித் தர வேண்டும்.

வந்தவாசி நகரத்தில், போக்குவரத்திற்கான புதிய போக்குவரத்துக் காவல் நிலையம், புதிய உள் விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி ஒன்றியம், மேல்மருவத்தூர் சாலையில் (மருதாடு, கீழ் கொடுங்காலூர், கல்லாங்குத்து) 100 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதியில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, வெண்குன்றம் தவளகிரிநாதர் திருக்கோயில் கிரிவலப்பாதை அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, தேசூர் பேரூராட்சியில் ITI கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசியில், கோரைப்பாய் நெசவாளர் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதியில், வட்டாட்சியர் அலுவலகம் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர், ஏந்தல் கிராமத்தில் சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்தித் தர வேண்டும்.

வந்தவாசியில், மினி டைடல் பார்க் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, ஆராசூர் கிராமத்தில் துரௌபதி அம்மன் கோயில் கட்டிக் குடமுழுக்கம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரில் பேருந்து நிலையத்திற்கு புதிய பணிமனை அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, தேசூர் பகுதியில் பத்திரப்பதிவு அலுவலகம் கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, தேசூர்-கிளாம்பாக்கம் பேருந்து வழித்தடம் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, நீதிமன்ற வளாகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதியில், சட்டக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி கட்டித் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, அரசினர் கலைக்கல்லூரியில் Ph. D. ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

வந்தவாசி தொகுதி, நல்லூர் கிராமத்தில் காவல் நிலையம் கட்டித் தர வேண்டும்.

இவ்வாறு எஸ்.அம்பேத்குமார் பேசினார்.